Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 4, 2025



இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம் இன்றாகும்

செவ்வாய்க்கிழமை, 04 பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர்: 151 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE




## பெப். 7 முதல் ‘Govpay’ ஆரம்பம்

அரச சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக ‘Govpay’ திட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பூர்வாங்க நிகழ்வு பெப்ரவரி 7ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான டிஜிட்டல் முறை மூலம் தடையின்றி கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடியவாறு, இத்திட்டத்தின் ஊடாக அரச நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களை சீரமைத்து நவீனமயப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



2 வருடங்களில் மீண்டுமொரு

# “கடன் மறுசீரமைப்பு வரும்”

இன்னும் இரண்டு வருடங்களில் மீண்டுமொரு கடன் மறுசீரமைப்பை செய்ய வேண்டி வரும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறியுள்ளார்.

குருநாகல், இப்பாகமுவ பிரதேசத்தில் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

IMF உடன்படிக்கை மூலம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்தபோது, சர்வதேச நாணய நிதியத்தோடு புதியதொரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம் என்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் தொடர்ச்சி P2



## மன்னார் துப்பாக்கிச்சூடு: யாழில் ஒருவர் கைது

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட துப்பாக்கி சூடு சம்பவத்துடன் தொடர்புடைய மேலுமொருவர் யாழ்ப்பாணம் பெரியவிளான் பகுதியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (03) கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## அமைச்சர் ஆனந்தவின் எம்.பி. பதவிக்கு எதிராக மனு



பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதியற்றவர் என உத்தரவிடுமாறுக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் ரேணுக பெரேரா தாக்கல் செய்துள்ள மனுவில், அமைச்சர் ஆனந்த விஜேபால, பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இதில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## “மஹிந்த தயாராக உள்ளார்”

### ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கமே பொறுப்பு



அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ இல்லத்தை காலி செய்யத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் திங்கட்கிழமை (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2

## அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க திட்டம்



அரச சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் 90 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## பிரதி அமைச்சருக்கு மீனவர்கள் எதிர்ப்பு



### எங்கள் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை

மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்திற்கு விஜயம் செய்த கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, எரிபொருளுக்கு நியாயமான விலை கோரி மீனவர்களின் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளார்.

“ஒரு லிட்டர் எரிபொருளை 100 ரூபாய்க்கு வழங்குவதாக அரசாங்கம் ஏற்கெனவே உறுதியளித்துள்ளது, அதன்படி, விலை குறைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

தொடர்ச்சி P2

## “பேச்சுவார்த்தை இவ்வாரம் நிறைவுறும்”

### இணைவு எவ்வாறானது என்பதை குறிப்பிட முடியாது

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளை இவ் வாரத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், உள்ளூராட்சிசபை தேர்தலுக்கு முக்கியத்துவமளித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்குமாறு இருகட்சிகளின் தலைவர்களும் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கூறியுள்ளார். தொடர்ச்சி P2





## இன்று மூடப்படும்

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம் இன்று (04) நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனால், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் சட்டவிரோதமான மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் உதய குமார பெரேரா தெரிவித்துள்ளார்.





## 7 கோடி ரூபாய் மதிப்புள்ள ஐந்து வாகனங்கள் சிக்கின

சட்டவிரோதமாக வாகனங்கள் ஒன்று சேர்க்கப்படும் மூன்று இடங்களில் வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு சோதனை நடத்தி, எழு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள அதிசொகுசு வாகனங்கள் ஐந்தை கைப்பற்றியுள்ளது.

இரத்தினபுராவின் கலவான பகுதியில் சட்டவிரோதமாக வாகனங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு போலி ஆவணங்களுடன் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து, கலவான பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் குழுக்கள் சோதனை மேற்கொண்டுள்ளன.

அந்த வாகனங்களின் செசி எண்கள் மற்றும் எஞ்சின் எண்கள் போலியாக தயாரிக்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளதாகவும், ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சி P2

## “முற்றிலும் தவறானது”

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது, இலங்கை விமானப்படையின் மூன்று விமானங்கள் பயன்படுத்தப்பட்டதாக பரவிய உண்மைக்கு புறம்பான செய்தி தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு ஞாயிற்றுக்கிழமை (2) பிற்பகல் ஒரு விளக்கத்தை வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த 31ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கான தனது பயணத்திற்காக ஜனாதிபதி இலங்கை விமானப்படை விமானங்களைப் பயன்படுத்தியதாக சமூக ஊடகங்களில் பரவும் செய்தி முற்றிலும் தவறானது எனவும் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்திற்கு இலங்கை விமானப்படையின் எந்த விமானமும் பயன்படுத்தப்படவில்லை என்றும், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாகனம் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.



## “மறுமலர்ச்சிக்காக அணிதிரள்வோம்”

## “தேசத்திற்காக அர்ப்பணிப்போம்”

## “ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம்”

முழுச் செய்தி P3

PAGE 1 தொடர்ச்சிகள்

# “கடன் மறுசீரமைப்பு வரும்”

பொதுத் தேர்தலின் போது கூறியது. இப்போது முந்தைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட அதே ஒப்பந்தத்தை அதே வழியில் முன்னெடுத்து வருகின்றது. இவற்றுக்கு மத்தியில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளதா என அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகிறேன். மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நாடு எதிர்கொள்ளும் உண்மையான யதார்த்தம் என்னவென்றால், நாட்டிற்கு வழங்கியுள்ள பல முக்கிய இலக்குகளை நாம் முடிக்க வேண்டும். அவற்றில், விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் உயர் அரசாங்க வருவாயைப் பேணுதல் முக்கியமானதாகும்.

தவறும் பட்சத்தில், இன்னும் 2-3 வருடங்களில் மற்றொரு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு செல்ல வேண்டி ஏற்படும். நான் இந்த விடயத்தை உறுதியாகச் சொல்கின்றேன். கடந்த காலங்களிலும் இதுபோன்ற எதிர்வுகூறல்களைச் சொன்னபோது நான் பரிகசிக்கப்பட்டேன், ஆனால் பின்னர் அவை அனைத்தும் நிகழ்ந்தன.

உலகின் பல்வேறு நாடுகளால் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்ட IMF ஒப்பந்தங்களை ஆராயும் போது, கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்களில் 59% மீண்டுமொரு கடன் மறுசீரமைக்கு இட்டுச் சென்றுள்ளன. இந்த உண்மைகள் மக்களிடமிருந்து மறைக்கின்றனர். இவற்றை யாரும் மக்களுக்குச் சொல்வதில்லை. மற்றொரு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு செல்வது என்பது மக்களை மேலும் சிக்கலில் தள்ளும் விடயமாகும். இது சவாலானது. முன்னோக்கிய பயணம் பல பிரச்சனைகளை கடந்து செல்ல உள்ளது. எனவே ஒரு நாடாக நாம் அந்த சவால்களை எதிர்கொண்டு நாட்டை பாதுகாக்க வேண்டும். எனவே நமது நாடு குறித்த விடயங்களில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த அஞ்ச வேண்டாம்.

இந்த தருணத்திலும் கூட எமது நாட்டு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் குடி மக்கள், நல்ல வலுவான கொள்கைகள் மூலம் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்ல நிலையை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்தவே அரசாங்கமொன்றை ஆட்சில் அமர்த்துகின்றனர். பிரச்சினைகளுக்கான பதில்களை வழங்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வழங்கிய வாக்குறுதிகளில் எத்தனை வீதத்தை இந்த குறுகிய காலத்தில் நிறைவேற்றியுள்ளீர்கள்? என்ன நடந்தது? என்பது தொடர்பில் சாதாரண மக்களின் வாழ்வில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில் இருந்து கொண்டு நாம் கேள்வி எழுப்பிப் பாரக்க வேண்டும்.

எனவே, சமாளிப்பான பேச்சுகளை விடுத்து யதார்த்தமான ஆட்சியை முன்னெடுப்பதில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று அரிசி தட்டுப்பாடு, தேங்காய் தட்டுப்பாடு, உப்பு தட்டுப்பாடு, பொருட்களின் விலை உயர்வு மறுபுறம் வருமான வீழ்ச்சி என பன்முக நெருக்கடிகளை மக்கள் சந்தித்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தற்போதைய அரசாங்கம் மக்களை வாழவைப்பதற்காக வேண்டி எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் பிரச்சினைகளுக்கான பதில்கள் நாட்டு மக்களை திருப்தியடையச் செய்துள்ளதா என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

# “பேச்சுவார்த்தை இவ்வாரம் நிறைவுறும்”

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், இரு கட்சிகளினதும் இணைவு எவ்வாறானதாக இருக்கும் என்பதை தற்போது எம்மால் குறிப்பிட முடியாது. தேர்தல் மாத்திரம் எமது நோக்கமல்ல. பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைப்பதே எமது இலக்காகும்.

அத்துடன், பல்வேறு விடயங்களில் இணக்கப்பாட்டை எட்டும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முன்னுரிமையளிக்குமாறு இரு கட்சிகளினதும் தலைவர்களால் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் குழுக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாரம் பாராளுமன்ற அமர்வுகள் இருப்பதால் அடுத்த பேச்சுவார்த்தை தொடர்பாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

எவ்வாறிருப்பினும், விரைவில் அவற்றை நிறைவு செய்யவே எதிர்பார்த்துள்ளோம். இணைந்து போட்டியிடும் பட்சத்தில் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மக்களும் அதனையே எதிர்பார்க்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஆயுர்வேத அழகுசாதனப் பொருட்கள் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

மக்களுக்கு ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஆயுர்வேத அழகுசாதனப் பொருட்களை சிறப்பான தரத்தில் வழங்குவதை இலக்காகக் கொண்டு மிகுந்த அவதானத்துடன் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் நளின் ஜயதிஸ்ஸ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆயுர்வேத மருந்துகள் மற்றும் பொருட்கள் ஒழுங்குமுறை சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (02) ராஜகிரிய ஆயுர்வேத தேசிய மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்பேதே அவர் அதனை டிதரிவித்துளுளார்.

அத்துடன், ஆயுர்வேத துறையின் ஒழுங்குமுறை பொறுப்பிலிருந்து விலகியிருக்கும் போது தரமான மற்றும் உயர்தர பொருட்கள் மக்களுக்கு கிடைப்பதில்லை தற்போது அது குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயுர்வேத அழகுசாதனப் பொருட்கள் மற்றும் ஆயுர்வேத மருந்துகளின் அனைத்து தயாரிப்புகள் மற்றும் உட்பொருட்களை ஒழுங்குபடுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் அமைச்சர் புதிய உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

# அதிக போதையால் இளைஞன் மரணம்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் ஒருவர் அதீத போதை காரணமாக சுகவீனமுற்று யாழ்.போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (02) உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உடற்கூற்றுப் பரிசோதனையில் அதீத போதை பாவனை காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட நிலையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்ததையடுத்து ஓரிரு நாட்களுக்கு முன்னரே விடுவிக்கப்பட்டவர் என்றும், சிறையிலிருந்து வெளியே வந்த பின்னர் நண்பர்களுடன் இணைந்து போதையை நுகர்ந்த நிலையிலையே, அதீத போதை காரணமாக சுகவீனமேற்பட்டது என பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், உயிரிழந்த இளைஞனுடன் சம்பவ தினத்தன்று போதையை நுகர்ந்த ஏனையவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து, மன்னார் கடற் பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த 10 இந்திய மீனவர்களை அவர்கள் பயணித்த மோட்டார் படகுடன் திங்கட்கிழமை (03) அன்று கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது, சுமார் 800 கிலோ கிராம் மீன்களை அவர்கள் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த 10 இந்திய மீனவர்களையும் மன்னார் உதவி மீன்பிடி பணிப்பாளர் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

மீனவர்களிடம் விசாரணை நடத்திய பின்னர், அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.



இதன்போது, எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# பிரதி அமைச்சருக்கு மீனவர்கள் எதிர்ப்பு

கடந்த ஆண்டு முதல் போராட்டம் நடத்தி வருகிறோம், ஆனால், எங்கள் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை” என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மீனவர்களுக்கு பிரதி அமைச்சர் எதுவித பதிலும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்பளத்தை அதிகரிக்க திட்டம்

தம்புத்தேகம பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அரச சேவையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், அரச சேவையை முழுவதுமாக மாற்றியமைக்க ஜனாதிபதி அமைச்சரவையில் பத்திரமொன்றை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அரச சேவையில் மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியம். அதற்காக சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 17ஆம் திகதி வரவு - செலவுத் திட்ட ஆவணத்தில், 90 பில்லியன் ரூபாவை செலவழித்து அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவும், குறிப்பாக அரசாங்க ஊழியர்களுக்கு 13 இலட்சம் பேருக்கு நிவாரணம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார்.

# 7 கோடி ரூபாய் மதிப்புள்ள ஐந்து வாகனங்கள் சிக்கின

பிரதான சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்துகொண்டிருந்த போது அவர், திடிரென மயங்கி விழுந்துள்ளார். அவர் இரத்தினபுரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமாக வாகனங்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு பெரும் இழப்பு ஏற்படுவதால், சுத்தமான இலங்கை திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வலான மத்திய ஊழல் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

# மன்னார் துப்பாக்கிச்சூடு: யாழில் ஒருவர் கைது

மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய குறித்த சந்தேக நபர், யாழ்ப்பாணம் - பெரியவிளான் பகுதியில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை, ஜனவரி 16ஆம் திகதி வியாழக்கிழமை (16) மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள இருந்தது.

இந்நிலையில் விசாரணைகளுக்காக சென்ற சந்தேக நபர்கள் மூவர் உள்ளடங்களாக நான்கு நபர்கள் மீது நீதிமன்றத்திற்கு முன் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் இராணுவத்துடன் தொடர்புடைய மூவர் உள்ளடங்களாக பலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விசேட அதிரடிப்படை மற்றும் யாழ்ப்பாண பொலிஸார், புலனாய்வு பிரிவினரால் குறித்த சந்தேக நபரை ஞாயிற்றுக்கிழமை(2) கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் மன்னாருக்கு அழைத்து வரப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# “மஹிந்த தயாராக உள்ளார்”

மேலும், நல்லாட்சி அரசாங்கத்தால் மஹிந்த ராஜபக்ஷவுக்கு உரிய உத்தியோகபூர்வ இல்லம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளதால், அதிலிருந்து வெளியேற வேண்டுமானால் அதுகுறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

அப்படி ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டால், மஹிந்த ராஜபக்ஷ ஒரு கணம் கூட அங்கே தங்க மாட்டார்.

அது குறித்து இங்கும் அங்கும் கருத்துக்களை வெளியிடுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

மேலும், உத்தியோகபூர்வ இல்லம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அமைச்சர் ஆனந்தவின் எம்.பி. பதவிக்கு எதிராக மனு

கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதியால் பிரதிவாதியான ஆனந்த விஜேபால பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதாகவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி வெளியான பத்திரிகை ஒன்றில், ஆனந்த விஜேபால ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியாக நியமிக்கப்பட்டதாக செய்தி வெளியிடப்பட்டதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தாம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கை விடுத்ததாகவும், அமைச்சர் ஆனந்த விஜேபால ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியாக நியமிக்கப்பட்டதை உறுதிப்படுத்திக் கொண்டதாகவும் மனுதாரர் கூறியுள்ளார்.

அரசியலமைப்பின் 91ஆவது பிரிவில் பொது சேவையில் ஈடுபடும் ஒருவர் பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிக்க தகுதியற்றவர் என குறிப்பிடப்பிடப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானி பதவி என்பது ஒரு அரச பதவி என்றும், அதன்படி, அமைச்சர் ஆனந்த விஜேபால அத்தகைய பதவியை வகிக்கும் அதேவேளையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதியற்றவர் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, அரசியலமைப்பின்படி அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் பதவி வகிக்க தகுதியற்றவர் என்று தீர்ப்பளித்து, அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வலுவற்றதாக்கி உத்தரவிடுமாறு மனுதாரர் நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

மேலும், இந்த மனு விசாரிக்கப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும் வரை ஆனந்த விஜேபால பாராளுமன்ற உறுப்பினராக அமரவும், பாராளுமன்றத்தில் வாக்களிக்கவும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், ஆனந்த விஜேபால பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகச் செயல்படுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

# அம்பலாந்தோட்டை முக்கொலை: ஐவர் கைது

அம்பலாந்தோட்டை- மாமடல பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) இரவு இடம்பெற்ற முக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமடல, எலேகொட மேற்கு பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (02) இரவு 7.30 மணியளவில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அம்பலாந்தோட்டை எலேகொட மேற்கு பிரதேசத்தில் உள்ள கொலை செய்யப்பட்ட நபர்களில் ஒருவரின் வீட்டில் அவரது இரு நண்பர்களுடன் இருந்த வேளையில், சுமார் 6 பேர் கொண்ட குழுவொன்று சென்று அவரது வீட்டு வாசலில் பேசிக் கொண்டிருந்த மூவரையும் கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், ஏனைய இருவரும் அம்பலாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எலேகொட மற்றும் மாமடல பிரதேசத்தை சேர்ந்த ஹெட்டியாராச்சியின் பிரபாத் இந்திக்க (29), ஹேவாகுமநாயக்க ரசிக பிரியதர்ஷன (45), மாதவ உதயங்க மல்லிகாரச்சி (34) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பெபாலிஸார் கூறியுள்ளனர்.

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட இரு தரப்பினருக்கு



இடையில் நீண்ட காலமாக நிலவி வந்த தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரூபா 1,000 பெறுமதியான மதுபான போத்தலை ரூ.1500 இற்கு விற்பனை செய்தமை தொடர்பில் இத்தகராறு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியமையால் இறந்தவர்களுக்கும் சந்தேகநபர்களுக்கும் இடையில் முன்விரோதம் இருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் தலையில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளான காயமடைந்த மூவரும் உடனடியாக அம்பலாந்தோட்டை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர்கள் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை உறுதிப்பட்டுத்தியுள்ளது.

வீட்டிற்கு வந்த சந்தேகநபர்களில் ஐவர், பிரபாத் இந்திக்கவின் தாயாரால் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மாமடல எலேகொட மேற்கில் வசிப்பவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாந்தோட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## “தேசத்திற்காக அர்ப்பணிப்போம்”



சுதந்திரம்’ என்பது தேசத்தின் இறைமை மட்டுமன்று. அது கண்ணியம், நீதி மற்றும் ஒடுக்குமுறை இல்லாத வாழ்வுக்காக அனைவருக்கும் உள்ள உரிமையை உறுதிப் படுத்துவதாகும். இனம், மதம், சாதி, பாலினம் அல்லது வர்க்கம் என்ற பேதமின்றி அனைத்து சமூகங்களும் இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பதற்கு சமமான வாய்ப்புகள் கிடைக்கின்ற, அனைவருக்கும் உரிய மதிப்பும் பெறுமானமும் கிடைக்கின்ற ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதன் மூலமே உண்மையான சுதந்திரம் சாத்தியமாகும் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது சுதந்திர தின வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வளமான நாடு, அழகான வாழ்க்கை’ என்பது வெறுமனே ஒரு எண்ணக்கரு மட்டுமன்று. அது செயற்பாட்டுக்கான ஒரு அழைப்பு. அது ஆழமான ஜனநாயகம் மற்றும் பொருளாதார நீதிக்கு முன்னுரிமை அளிக்கும் எண்ணக்கருவாகும். விளிம்பு நிலை சமூகங்களின் குரல்கள் தன்னெழுச்சியாக வெளிப்படுவதில்லை. அந்தக் குரல்கள் எழுகின்ற வகையில் தீர்மானங்களை மேற்கொள்வதில் அனைவரையும் பங்கேற்கச் செய்யும் ஒரு முறைமையுடன் இலங்கை தேசம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அது அனைவருடையவும் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட மற்றும் பெறுமதியை உணரும் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான உறுதிமொழியாகும்.

இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க நாளில், நாம் அடையாளக் கொண்டாட்டங்களுக்கு அப்பால் சென்று ஒரு அர்த்தமுள்ள மாற்றத்திற்காக - உண்மையிலேயே அனைவருக்கும் உரித்தான இலங்கை தேசத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றார்.

## “மறுமலர்ச்சிக்காக அணிதிரள்வோம்”



இன்று நாம் 77ஆவது தேசிய சுதந்திர தினத்தை ஒரு புதிய சுதந்திரத்திற்கான எதிர்பார்ப்புடன் கொண்டாடுகிறோம். நாம் தற்போது, இலங்கையின் வரலாற்றை மாற்றியமைத்து, வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என அனைத்து மக்களாலும் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் அரசாங்கத்துடன் புதிய பாதையில் நுழைந்துள்ளோம். கடந்த நூற்றாண்டில் நாம் இழந்த மற்றும் தவறவிட்ட வளமான நாட்டையும் - ஒரு அழகான வாழ்க்கையையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சவாலுடன் நாம் அனைவரும் இப்போது ஒன்றாக போராடுகிறோம் என ஜனாதிபதி தனது சுதந்திர தின வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நமது எதிர்கால சந்ததியினருக்காக நாட்டை புதிய நிலைக்கு உயர்த்த வேண்டும். இரத்தம், கண்ணீரால் போராடிய வரலாற்றின் அனைத்து தலைவர்களினதும் தியாகத்தின் எதிர்பார்ப்பு அதுவேயாகும். அதற்கிணங்க, நாம் தனித்தனியாகவும், கூட்டாகவும், ஒருங்கிணைந்த சமூகக் கட்டமைப்பாக, சுற்றாடல் மற்றும் ஒழுக்கநெறியூடாக அபிவிருத்தியடைந்த நவீன இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

புதிய அரசாங்கம் என்ற வகையில், கடந்த நான்கு மாதங்களில், வலுவான பொருளாதார அடிப்படையில் நாட்டை ஸ்திரப்படுத்துதல், புதிய அரசியல் கலாசாரத்தை நடைமுறைப்படுத்துதல், அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பிலான புதிய முன்னுதாரணத்துக்காக அர்ப்பணித்தல், இனவாதம்,மதவாதம் இன்றி மற்றவர்களை சமத்துவம், கௌரவம்,கரிசனையுடன் பார்ப்பது, நடத்துவது மற்றும் சட்டத்தை அமுல்படுத்துதல், ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

கிராமப்புற வறுமையை ஒழித்தல் உள்ளிட்ட முக்கிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான எமது கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை உறுதிப்படுத்தி, பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகக் குழுக்களை கைவிடாத அணுகுமுறையை உறுதிப்படுத்தும் நலன்புரி பொறிமுறையை உருவாக்குதல், நாம் தவறவிட்ட புதிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் அடைந்துகொள்ள பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்க தேவையான முதல் நடவடிக்கைகளை எடுத்தல், ஊழல் ஆட்சியாளர்கள் நிறைந்த நாடு என்று முன்பு காணப்பட்ட பிம்பத்தை தவித்து, உலகின் அனைத்து நாடுகளுடனும், நாடுகளுடனும் மிகவும் நம்பகத்தன்மையுடன் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய நாடென சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையை மீள அடையாளப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துகிறோம்.

இவ்வாறாக, ஊழல் ஆட்சியாளர்களின் ஆயிரம் அவதூறுகள் மற்றும் இடையூறுகளுக்கு மத்தியில் இந்த நாட்டின் பொது மக்களால் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் அரசாங்கம் சீராக முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. எமது வாக்குறுதியின்படி இலங்கையை தேசிய மறுமலர்ச்சி யுகத்தை இட்டுச் செல்வதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். அதன்படி, மேற்கூறிய அடிப்படையில், பல நூற்றாண்டுகளாக நாம் கண்ட கனவை நனவாகிக்கொள்ள வரலாற்றில் மிகவும் ஆக்கபூர்வமான பணிகளை அசைக்க முடியாத நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்லவேண்டியுள்ளது.

அதற்காக, அனைத்து இலங்கை மக்களையும் உறுதி மற்றும் நம்பிக்கையுடன் அணிதிரளுமாறும், 77ஆவது தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில்,சுத ந்திரத்தின் நவீன முன்னுதாரணத்தை கட்டியெழுப்பும் பணியில் இணையுமாறும், மறுமலர்ச்சி யுகத்திற்கான புதிய திருப்பத்துடன் கூடிய கூட்டு முயற்சியில் இணையுமாறும், அனைத்து இலங்கை மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன் என்றார்.


# ஹரி ஜெயவர்தன, கென் பாலேந்திரா ஆகிய இருவரும் காலமாகினர்

இலங்கையில் வணிகத்துறையில் பிரபலமாக இருந்த, தேசமான்ய கென் பாலேந்திரா மற்றும் ஹரி ஜெயவர்தன ஆகிய இருவரும் காலமாகினர்.

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் முதல் இலங்கைத் தலைவரான தேசமான்ய கென் பாலேந்திரா காலமானார். அவர் இறக்கும் போது அவருக்கு 84 வயது.

சிலோன் டுபேகோ கம்பெனி, பிராண்டிக்ஸ், யூனியன் அஷ்யூரன்ஸ் உள்ளிட்ட பல நிறுவனங்களில் தலைவர் மற்றும் இயக்குநர் பதவிகளை வகித்த பாலநேத்ரா, இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவராவார்.

ஒரு காலத்தில் நாட்டின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவராகவும், பிரபல





தொழிலதிபராகவும் இருந்த தேசமான்ய ஹரி ஜெயவர்தன காலமானார்.

பல வருடங்களாக நோய்வாய்ப்பட்டு இருந்த அவர் இறக்கும் போது 82 வயதாகும்

டான் ஹரோல்ட் ஸ்டாசன் ஜெயவர்தன 1942 ஆகஸ்ட் 17, ஜா-எலவில் பிறந்தார், 2008 ஆம் ஆண்டில் இலங்கையின் மிகப் பெரிய பணக்காரர் ஆனார்.

அவர் ஒரு முக்கிய தொழிலதிபராகவும், சக்திவாய்ந்த தொழிலதிபராகவும் இருந்தார், இலங்கையில் டென்மார்க்கின் கௌரவ தூதரக ஜெனரலாகப் பணியாற்றினார்.

இவர், மெல்ஸ்டாகார்ப் பிஎல்சியின் தலைவராகவும், டிஸ்டில்லரீஸ், இலங்கை பிஎல்சி, லங்கா பெல் மற்றும் ஐட்கன் ஸ்பென்ஸ் பிஎல்சி ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார்.

# யானைக்கு பயந்து ஓடியவர் மின்சாரம் தாக்கி மரணம்



வ.சக்திவேல்

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்சேனை கிராமத்தில் யானை பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் முதலைகுடாவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் சீராளசிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வயலுக்கு காவலுக்கு சென்றவேளை, திங்கட்கிழமை(03) அதிகாலை 02.00 மணியளவில் யானை துரத்திச் சென்றுள்ளது. யானைக்குப் பயந்து ஓடியதில் சட்டவிரோதமாக இணைக்கப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்குண்டு விவசாயி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். குறித்த பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தரால் கடந்த மார்கழி மாத்தில் ஒலிபெருக்கி மூலமும் கிராம கூட்டங்கள் ஊடாகவும் காட்டு யானை பாதுகாப்புக்காகச் சட்டவிரோத மின்சார வேலியினை அமைக்க வேண்டாம் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராட்சத காற்றாலை கோபுரம் இடிந்ததில் 3 வீடுகளுக்கு சேதம்

கல்பிட்டி - துடாவ பகுதியில் கந்தகுளிய பிரதேசத்தில் திங்கட்கிழமை (02) அன்று காற்றாலை மின் உற்பத்தி கோபுரத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

தனியார் மின்சார உற்பத்தி நிறுவனத்திற்கு சொந்தமான காற்றாலை கோபுரத்தின் ஒரு பகுதி திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்விடத்தில் குறித்த நிறுவனத்திற்கு சொந்தமான ஐந்து காற்றாலை கோபுரங்கள் இருப்பதாகவும், அவற்றில் ஒன்றின் ஒரு பகுதி இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது.

இந்தக் காற்றாலை விசையாழிகளில் ஒன்று 270 அடிக்கு மேல் உயரமும், அங்கு நிறுவப்பட்ட தளம் சுமார் 129 அடி நீளம் கொண்டது.

காற்றாலை கோபுரம் இடிந்து விழுந்ததில் ஒரு வீடு முற்றிலுமாக சேதமடைந்ததோடு, அருகில் அமைந்துள்ள இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இருப்பினும், கோபுரம் இடிந்து விழுந்த நேரத்தில் வீடுகளில் யாரும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.



## “ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம்”



நாட்டின் 77ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இத்தருணத்தில், சுதந்திரம் மற்றும் அதன் பின்னர் நமது தாய்நாடு கடந்து வந்த காலகட்டத்தை மீண்டும் நினைவுகூர்வது அவசியமாகிறது. சுதந்திரம் பெற்ற தருணத்தில், நாம் ஒரு நாடாக வறுமை, நோய்கள் மற்றும் அறியாமையிலிருந்து விடுபட்டு சுதந்திர நாடாக எழுச்சி பெறுவதன் தேவை அடிப்படையானதாக இருந்தது. இதற்காக சுதந்திரத்திற்குப் பின்னர் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என திரிக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலவசக் கல்வி மூலம் நாடு முழுவதும் பாடசாலை முறைமைகள் மற்றும் பல்கலைக்கழக முறைமைகள் வலுப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக 1948இல் 35% ஆக இருந்த கல்வியறிவு விகிதம் இன்று 95% ஆக உயர்ந்துள்ளது. அதேபோல், 1948இல் 45 ஆண்டுகளாக இருந்த ஆயுட்காலம் இன்று 75 ஆண்டுகளைக் கடந்துள்ளது இது சுகாதாரத் துறையின் வெற்றியாகும்.

அத்துடன், விவசாயத்தை மேம்படுத்த தொடங்கப்பட்ட விவசாய குடியேற்றத் திட்டங்கள் மற்றும் மகாவலி போன்ற விரைவான அபிவிருத்தித் திட்டங்கள் மூலம், இன்று ஒரு ஹெக்டயார் காணியில் கிடைக்கும் நெல் விளைச்சல் 350 கிலோவிலிருந்து 3,500 கிலோ வரை அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, காணிகள் இல்லாத மக்களுக்கு காணி உரிமை வழங்குதல் மற்றும் பல நீர் மின் நிலையங்களைத் தொடங்குதல் ஆகியவற்றுடன் வலுசக்தித் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மூலம் புதிய உலகம் நோக்கி நமது நாடு முன்னேறியதோடு, அதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையும் விரிவடைந்து, 1994இல் இலங்கை மனித அபிவிருத்தி தசாப்தத்தில் முதலிடத்தைப் பெற்றது.

1994இல் இலங்கை தென் கொரியா, மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுடன் சமநிலையில் இருந்தபோதிலும், அது மாற்றமடைவதற்கு காரணமான அரசியல் கருத்தியல்கள் என்ன என்பதை நாம் இப்போது ஆழமாக ஆராய வேண்டும். அதிகாரத்தைப் பெறுவதற்கான குறுகிய நோக்கங்களுடன் இந்த வெற்றிகளை மறைத்த அரசியல் மாயைகள்

காரணமாக இன்று நாடு எதிர்கொள்ளும் கடுமையான சவால்களை விமர்சன ரீதியாக ஆராய்வது, நாம் பெற்ற சுதந்திரத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்க உதவும். பழைய பிரச்சினைகளுக்கு பழைய தீர்வுகள் அல்ல, புதிய தீர்வுகளை வழங்கி, சுதந்திரத்திற்குப் பின்னர் நாம் உரிமையாகப் பெற்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவது இந்த தருணத்தில் நமது பொறுப்பாகும். இதற்காக நிகழ்காலத்தை சரியாக புரிந்து கொண்டு இனவாத மதவாத குறுகிய சிந்தனைகளை தோற்கடித்து ஒன்றிணைவதற்கு இந்த சுதந்திர தினத்தில் உறுதியேற்போம் என்றார்.

# ஆட்சியிலுள்ள எதிர்கட்சி அரசாங்கத்தின் கதை கூரல்கள்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பதவியேற்று நான்கு மாதங்களும், பாராளுமன்றத்தில் இதுவரை காலமும் தனித்துப் பெற்றிராத மாபெரும் தனிப் பலத்தைக் கொண்ட தற்போதைய அரசாங்கம் பதவியேற்று இரண்டு மாதங்களும் கடந்து விட்ட நிலையில், மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளமைக்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, ஜனாதிபதி நாட்டின் பல பாகங்களுக்கும் விஜயங்களை மேற்கொண்டு, மக்கள் மத்தியில் உரையாற்றுகையில், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார், அல்லது அதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தாம் இன்னமும் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்து, அரசாங்கம் செய்வதைப் போன்ற பாணியில் உரைகளை ஆற்றுகின்றமையின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாமலுள்ளது.

குறிப்பாக, மக்களின் தீராத பிரச்சினையாகத் தொடரும் அரிசி, தேங்காய் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள், இன்னமும் நாட்டின் பல பகுதிகளில் காணப்படும் நிலையில், அதிகரித்துள்ள அவற்றின் விலைகளைக் குறைப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது பற்றிய தீர்வுகள் இல்லை.

மாறாக, அரசியலமைப்பின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதிய வாசஸ்தலங்களை மீளப் பெறுவது தொடர்பிலும், கடந்த கால அரசாங்கங்கள் மேற்கொண்ட தவறுகள், ஊழல்கள், பெற்றுக் கொண்ட சலுகைகள் போன்றன தொடர்பில் பேசப்படுகின்றன.

கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களின் பிள்ளைகள், உறவினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, மறுநாள் வெளியில் பிணையில் வருவதையும், அதைப் பெரிய விடயமாகக் காண்பித்து, மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு பெறுவது போன்ற நாடகங்கள் சிலவும் நடந்தேறுகின்றன.

நாட்டில் சட்டம் ஒன்று உள்ளது. அது அனைவருக்கும் பொதுவானது. முன்னாள் ஜனாதிபதியின் மகன் அல்லது உயர் பதவி வகித்தவர் என்பதற்காக ஒருவிதமான நடத்தையும், சாதாரண குடிமகன் என்றால் இன்னொருவிதமான நடத்தையும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. முன்னாள் ஜனாதிபதியின் மகன் கடந்த வார இறுதியில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது தமக்குச் சோறும், சம்பலும் வழங்கப்பட்டதாகத் தெரிவித்த கருத்தை சில ஊடகங்கள் பெரிதுபடுத்திக் காண்பித்திருந்தன. அதுவே, வழமை, அதில், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அரிசியும், தேங்காயும் விற்கும் விலைக்கு, தற்போதும் அவை வழங்கப்படுவதே பெரிய விடயம்.

எனவே, அரசாங்கம் முதலில் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். காலையில் கைது செய்யப்படுபவர், மாலையில் பிணையில் வீடு திரும்ப முடியாத வகையில், குறைந்தது 14 நாட்களாவது தடுத்து விசாரிக்கப்பட வேண்டிய வகையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளைக் குறைக்கும் அரசியலமைப்பு திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும். அதன் பின்னர் அவற்றைச் செயற்படுத்த வேண்டும்.

தொடர்ந்தும், எதிர்க்கட்சி போல வசனங்கள் பேசிக் கொண்டிராமல், அதிகார பலத்தைக் கொண்ட ஆளும் கட்சியாகச் செயலாற்ற வேண்டிய காலம் இது.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




முஸ்லிம் சமூக அரசியலில்

# பல்கலைக்கழகமும் புத்திஜீவிகளும் செய்யாத பணி

மொஹமட் பாதுஷா

இலங்கை அரசியலில் கல்விச் சமூகத்தின் செல்வாக்கு குறிப்பாக பல்கலைக்கழகங்களின் வகிபாகம் எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. இளவயது இளைஞர்களை மொத்தமாக ஒரே தளத்தில் அணுகக் கூடிய இடமாகவும் ஒன்றுதிரட்டிக் கையாளக் கூடிய தளமாகவும் பல்கலைக்கழகங்கள் இருப்பது அரசியலைப் பொறுத்தமட்டில் முக்கியமான சாதக நிலையாகும்.

இந்த அடிப்படையில், நாட்டில் பெரும்பாலான ஆட்சியாளர்கள், எதிர்க்கட்சிகள் தங்களுக்கு வேண்டிய நகர்வுகளைச் செய்வதற்குப் பல்கலைக்கழக மாணவ சமூகத்தைப் பயன்படுத்தி வந்திருக்கின்றன.

அதற்கு நாமே நேரடியாகவே கண்ட உதாரணமாக, இன்று என்.பி.பியாக தன்னை முன்னிறுத்தியுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் மாணவ வலையமைப்பை கொள்ளலாம்.

தெற்கில் இவ்வாறு சிங்கள இளைஞர்கள் தங்களது தேவைகளுக்காக அரசியல் தரப்பினரால் கையாளப்பட்டது மட்டுமன்றி, அரசியல் அரங்கில் மறைமுகமாக ஒரு அழுத்தக் குழுவாகவும் இயங்கினர் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

பிற்காலத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம் உள்ளடங்கலாக புத்திஜீவிகளும் இதில் ஒரு வகிபாகத்தை எடுத்தனர் எனலாம். தென்னிலங்கை அரசியலைத் தீர்மானிப்பதில் பேராதனை, கொழும்பு, களனி போன்ற பல்கலைக்கழகங்கள் எந்தளவுக்கு முக்கியமானதாக இருந்தது என்பதைச் சரித்திரக் குறிப்புக்களைப் படிப்பதன் மூலம், குறிப்பாக இன்றைய இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

அதேபோன்று, வடக்கை மையமாகக் கொண்ட தமிழ்த் தேசிய அரசியலில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைச் செய்திருக்கின்றது. இன்று வரை செய்து கொண்டும் வருகின்றது. தமிழர் விடுதலை உணர்வுக்கு வலு சேர்ப்பதிலும், தேவையான போது தமிழ் மக்களுக்கான அரசியலை வழிப்படுத்துவதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் பணி முக்கியமானது.

பின்னாளில் இந்த ஒழுங்கில் கிழக்குப் பல்கலைக்கழகமும் கொஞ்சம் இணைந்து கொண்டது என்று கூறலாம். இதற்கு சமாந்திரமாக தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என் சமயவாதிகளும் கூட அச் சமூகத்தின் அபிலாஷைகளை வலியுறுத்துவதில் ஒரு அழுத்தக் குழுவாகவும், அரசியல்வாதிகளை நெறிப்படுத்தும் வெளித்தரப்பாகவும் இன்னும் இருக்கின்றனர்.

யுத்த நிலைமையைப் பயன்படுத்தி கணிசமான தமிழர்கள் மேற்கத்தேய நாடுகளில் தஞ்சம் புகுந்து, பிறகு நிறைய உழைத்துக் கொண்டார்கள் என்று கூறப்படுவதுண்டு. அதேபோன்று வடக்கு, கிழக்கு தமிழர்களை வைத்து இன்னும் அரசியல் செய்து கொண்டிருக்கும் டயஸ்போராக்களும் உள்ளனர். அது வேறு விடயம்.

ஆனால், இந்த புலம்பெயர் சமூகம் கூட தமிழர்கள் விடயத்தில் ஒரு வெளிப்புற அழுத்தக் குழுவாக இப்போது இருக்கின்றது. அதைவிட முக்கியமாக உள்நாட்டில் மேற்குறிப்பிட்ட யாழ்ப்பாண, வந்தாறுமூலை பல்கலைக்கழகங்கள் மற்றும் தமிழ் புத்திஜீவிகள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு அதிகளவான பங்களிப்பை வழங்கியிருக்கின்றார்கள்.

சில தருணங்களில் விடுதலைப் புலிகளை, தமிழ் ஆயுதக் குழுக்களை ஒழுங்குபடுத்துவதற்காக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வீணாகிப் போயிருந்தாலும், சிங்கள அரசியலில் பல்கலைக்கழக மாணவர்கள், பௌத்த பீடங்கள் எடுத்ததற்குச் சமமான வகிபாகத்தை தமிழர் அரசியலில் புத்திஜீவிகளும் பல்கலைக்கழகங்களும் எடுத்தன என்பதை மறுக்க முடியாது.

ஆனால், இந்த நாட்டில் மிக நீண்டகாலமாகப் பட்டவர்த்தனமாக வஞ்சிக்கப்பட்டு வருகின்ற மலையகத்தில் வாழும் மூவின மக்கள் தொடர்பிலும் குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு விமோசனம் கிடைப்பதற்கு இப்படியான ஒரு அழுத்தக் குழுவோ கனதியான பல்கலைக்கழக மாணவர்கள்ரன் அல்லது படித்தவர்களின் கட்டமைப்போ இல்லை என்பது ஒரு வரலாற்றுத் துயரன்றி வேறில்லை.

இதேநிலைமையில்தான் இலங்கை முஸ்லிம்களும் இருக்கின்றனர். ஆனால், நாம் இப்படியான ஒரு கையறுநிலையில் இருக்கின்றோம் என்பதைக் கூட முஸ்லிம் சமூகத்தில் உள்ள கல்விக் கூடங்களும், புத்திஜீவிகளும் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்களும் தெளிவுற விளங்கியிருப்பதாகத் தெரியவில்லை.

இது விடயத்தில் பல முஸ்லிம் தரப்பினரும் பொறுப்புக்கூற வேண்டும். அதிலும் குறிப்பாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், அதன் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் தூரதிர்ஷ்டியான கனவுகளை உயிர்ப்பிப்பதிலும், முஸ்லிம்களுக்கான அரசியலைச் சீரமைப்பதிலும் ஒரு சரியான பங்களிப்பை வழங்கவில்லை.

அதேபோன்று, முஸ்லிம்களுக்குள் வேறு எந்த அடிப்படையிலும் ஸ்திரமான ஒரு அழுத்தக் குழுக்கள் உருவாகவில்லை. அப்படியான தோற்றப்பாட்டை வெளிப்படுத்திச் செயற்பட்ட சில தனிநபர்கள், குழுக்கள் அரசியல் சாக்கடைக்குள் ஏற்கெனவே விழுந்து விட்டன. மீதமிருந்த சிலவும் இந்த மாற்றத்தின் அலைக்குள் அள்ளுண்டு சென்று விட்டன.

இன்று முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியாக ஒரு சூனியத்திற்குள் வந்து நிற்கின்றது. முஸ்லிம் கட்சிகளையும் அரசியல்வாதிகளையும் முஸ்லிம் சிவில் சமூகம் ஏதோ ஒரு அடிப்படையில் நெறிப்படுத்தத் தவறியதால் ஹக்கீம், றிசாட், அதாவுல்லா மட்டுமன்றி, பெரும்பான்மைக் கட்சிகளில் அரசியல் செய்த முஸ்லிம் எம்.பிக்களும் தாம் விரும்பியதைச் செய்து கொண்டிருந்தனர்.

இவர்களது அரசியல் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகளை வெல்வதற்கான பாதையாக இருக்கவில்லை. அந்த மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கவில்லை. அதற்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கான அரசியலும் சரிவர சீரமைக்கப்படவில்லை. இதனால் வெறுப்புற்ற மக்கள் இந்தத் தேர்தலில் எடுத்த முடிவு நமக்குத் தெரியும்.

இனிவரும் காலத்தில் முஸ்லிம்கள் தனித்துவமான, தங்களுக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டிய தேவை, என்.பி.பி. ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள்ளேயே உணரப்படுகின்றது. ஆனால், முன்னோக்கிச் செல்ல முடியாத ஒரு முட்டுச் சந்தில் முஸ்லிம்களுக்கான அரசியல் இப்போது இறுகி நிற்கின்றது.

மறைந்த தலைவர் அஷ்ரப் வெறுமனே பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று நினைத்தவரல்ல. ஒலுவிலில் உள்ள இந்தப் பல்கலைக்கழகம் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைச் சிருஷ்டிப்பதற்கான மையப் புள்ளியாக இருக்க வேண்டும் என்று அவர் கனவு கண்டார்.

அங்கு முஸ்லிம் சமூகம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த சமூகத்தின் அரசியல் இருப்பும், உரிமைகளும் ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்தப்பட வேண்டும். அந்த அடிப்படையில் சமூகத்தை வழிநடத்துவதற்கான ஒரு வெளிச்ச வீடாக அது அமைய வேண்டும் என்று அவர் நினைத்தார்.

ஆனால், தமிழர் அரசியலில் இரு பல்கலைக்கழகங்கள் எடுத்த வகிபாகத்தை ஏன் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் அரசியலில் எடுக்கவில்லை. அப்படி எடுத்திருப்பதாக யாராவது சொர்னனால் அது எந்தக் கட்டத்தில் உள்ளது. அதன் வெற்றியின் அடைவு மட்டம்தான் என்ன என்று கூற வேண்டும்.

அதேபோன்று, அஷ்ரபின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறிய அவரின் செல்லப் பிள்ளைகளான அரசியல்வாதிகள் கூட ஏன் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை ஒரு சமூக அரசியல் மாற்றத்திற்கான மையப்புள்ளியாக மாற்றுவதற்கு விரும்பவில்லை?

தறிகெட்டு ஓடிய, ஓடும் முஸ்லிம் அரசியலை நெறிப்படுத்துவதில் தென்கிழக்குப் பல்கலைக்கழமோ முஸ்லிம் சமூகத்தின் சமய கட்டமைப்புக்களோ அல்லது புத்திக் குழுக்களோ ஒரு சரியான அழுத்தக் குழுவாக இருந்து சமூகத்தை வழிநடத்தவில்லை. முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களின் தவறுகளை தட்டிக் கேட்ட வரலாறும் இல்லை.

தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்திற்கான பிரத்தியேக அரசியலை மழுங்கடிப்பதற்கான அலைகள் எழுந்த போது, உண்மையில் முஸ்லிம் சமூகம் யாரை ஆதரிக்க வேண்டும்? என்ன முடிவை எடுப்பது நீண்டகால அடிப்படையில் பாதுகாப்பானது என்று ஆராய்ந்து சமூகத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும் சொல்வதற்கும் இன்று வரை யாருமில்லை.

தம்மீதுள்ள இந்த தார்மீக வரலாற்றுப் பணியை நாம் இதுவரை நிறைவேற்றவில்லை என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ, ஆசிரிய, ஊழியர் சமூகங்களும் அதேபோன்று, முஸ்லிம் சமூகத்தில் உள்ள ஏனைய பல்துறை புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், வியாபாரிகள், பொன்னாடைகளுக்காகவும் போலிப் பட்டங்களுக்காகவும் அலைகின்ற கூட்டம் என்ற பலதரப்பட்டோரும் சிந்தித்ததாவது உண்டா? இந்தக் கேள்விக்கு விடை ‘ஆம்’ என்று கூறக் கூடிய நிலைமை இருக்குமென்றால் கூட, எதிர்காலத்திலாவது முஸ்லிம் சமூகத்திற்கு விமோசனம் கிடைக்கும் என ஓரளவுக்கு ஆறுதல் கொள்ளலாம்.



## வாழ்வியல் தரிசனம்

மேகம் கருமையாகும், பின்னர், அதுவே ஒரு சில நேரங்கள் செல்ல, வெளித்து, வானம் நீல நிறமாகி விடும். இதுபோலவே மானிட வாழ்க்கையும்.

சில பொழுது கவலை, அடுத்து மகிழ்ச்சி, சின்ன சின்ன அதிர்வுகள். அது போய்விட, நகைச்சுவை பேச்சுகள், நண்பர்கள், உறவினர்களுடன் அரட்டை.

குடும்பங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருப்பர். சகலருக்கும் மனம் மாறிமாறிப் புரளும். இதைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுவே நல்லது. மீண்டும் அவர்களே திரும்பி வருவார்கள்.

சின்னக் காரியங்களைப் பெரிதாகக் கருதலாகாது. நாங்களும் அவர்களில் ஒருவர் அல்லவா! எனவே, எவரையும் ஒதுக்குவது கூடாது.

தவறு செய்தல், கோபித்தல், ஒதுங்கி நடத்தல், கண்டபடி ஒருவரைச் சீண்டுதல் இவை எல்லாம் நடந்துகொண்டே இருக்கும்.

மிருகங்களுக்கும் உணர்வு உண்டு. ஒருகணம் ஓடிப்பிடிக்கும் சுபாவமும் மறுகணம், கத்திச் சண்டை செய்வதும் இயல்பானது. இவை உயிரினங்களின் இயல்பு.

எனவே, மனஸ்தாபப்படுவதும் பின்னர், ஒன்றிணைவதும் உயிரினங்களுக்கும் எமக்கும் உள்ள ஒற்றுமையாகும். உயிர் வாழ்வு ஒன்றேதான்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்


## கடிதங்கள்

### விளைச்சல் இல்லை; விவசாயிகள் ஆதங்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை, பெரிய நிலப்பகுதியில் பெரும்போக வேளாண்மை செய்கை அறுவடையின்போது விவசாயிகளுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். குறித்த மாவட்டத்தில் கடந்த வருட இறுதியிலும், இவ்வருட ஆரம்பத்திலும் ஏற்பட்ட மழை, மற்றும் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாகவும், வேளாண்மைச் செய்கை வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டு அதிலிருந்து எதிர்பார்த்த அறுவடை கிடைக்காமலுள்ள நிலையில், அறுவடை செய்யப்பட்ட மீதமான நெல்மணிகளில் கறுத்த புள்ளிகள் மற்றும் நிறை குறைவாகவும் அதிகம் பதராகவும் காணப்படுவதனால் இம்முறை எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை. பாதிப்புக்கு உள்ளான தமக்கு, உரிய நஷ்டஈட்டைத் தந்து உதவுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த வருடம் ஏக்கருக்கு 30 மூடைகள் கிடைத்த போதும் தற்போது 15 மூடைகள் அளவில் கிடைப்பதாகவும், விவசாயிகள், கவலை தெரிவிக்கின்றனர். தாம் வங்கிகளில் நகைகளை அடகு வைத்து கடைகளில் எண்ணை, பசளைகளை, கடனுக்குப் பெற்றுள்ள போதும் தற்போது அதற்குரிய அறுவடை இலாபத்தினை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் எனவே ஜனாதிபதி விவசாயிகளின் பாதிப்புகளைக் கவனத்தில் கொண்டு தங்களுக்குரிய இழப்பீடுகளைத் தந்து உதவுமாறு இப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– வ.சக்தி



# இலங்கையின் சுதந்திர தினம்




இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம், புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் மிகவும் எளிமையான முறையில் கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி, நாடளாவி ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிப்பீடம் ஏறியதன் பின்னர் கொண்டாடப்படும் முதலாவது சுதந்திர தினமாகும்.

கி.பி. 1505ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரினால் இலங்கையின் கரையோர பிரதேசம் கைப்பற்றப்பட்டது. இதனைத்தொடர்ந்து, கி.பி. 1602இல் ஒல்லாந்தரின் ஏகாதிபத்தியத்துக்கு இலங்கையர்கள் அடிமைப்பட வேண்டி ஏற்பட்டதுடன், கி.பி. 1766ஆம் ஆண்டளவில் பிரித்தானியரின் ஆக்கிரமிப்பின் காரணமாக கந்த உடரட்ட சிங்களவர்கள் என்று அழைக்கப்படும் மலைநாட்டு சிங்கள மக்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழ்ந்த இலங்கை மக்களும் மீண்டும் அடிமை நிர்வாகத்திற்கு உட்பட வேண்டி ஏற்பட்டது.

கந்த உடரட்ட சிங்களவர்கள் என்று அழைக்கப்படும் மலைநாட்டு சிங்கள மக்களின் பிளவு அதிகார குழுக்களினால் 1815ஆம் ஆண்டளவில் உடரட்ட என்ற மலையகப் பிரதேசத்தையும் எந்தவித சிரமமுமின்றி பிரிட்டன் தமது நிருவாகத்திற்கு உட்படுத்தியது. இதன் பின்னர் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் நிருவாகத்திற்குள் கொண்டுவரப்பட்டது.

இலங்கையர்களின் சுதந்திரப் போராட்டம் இங்கிருந்தே ஆரம்பமாகின்றது என்று கூறலாம். 1818ஆம் ஆண்டு உடரட்ட என்ற மலையக பெருங்கலகம், 1823ஆம் ஆண்டு கொஸ்வத்தை கிளர்ச்சி, 1826ஆம் ஆண்டு பிம்தென்னே கிளர்ச்சி, 1835ஆம் ஆண்டு மல்வத்து விகாரையின் கிளர்ச்சி, 1848ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி முதலான கிளர்ச்சிகள் ஆரம்பமானவை நாட்டு மக்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனேயாகும். 1818ஆம் ஆண்டு கிளர்ச்சியினால் சிறிய அளவில் அல்லது ஆங்கிலேயரின் நிர்வாகத்தில் அவர்களது கொடூரமான நிர்வாகத்தில் தளர்வை ஏற்படுத்தவேண்டி ஏற்பட்டது.

1831ஆம் ஆண்டில் அரசாங்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கோல்புறுக் ஆணைக்குழுவினர், முதல் முறையாக அவர்களது ஆட்சி முறையில் மறுசீரமைப்பு ஆலோசனையை சமர்ப்பித்தனர். பிரித்தானியர்களின் இந்த முயற்சி பெருமளவில் வெற்றியடையவில்லை.

1848ஆம் ஆண்டு மாத்தளை பெருங்கிளர்ச்சி ஆரம்பமானதுடன், அது இலங்கை சுதந்திர போராட்டத்தின் இறுதி கிளர்ச்சியாக அமைந்தது. 1796ஆம் ஆண்டில் இலங்கையின் ஒரு பகுதி மாத்திரம் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படுத்தப்பட்டு இருந்தது. அதன் பின்னர் 1815ஆம் ஆண்டில் முழு நாடும் பிரிட்டனின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்த யுகம் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி முடிவிற்கு வந்தது.

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கை மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்த பின்னர் கடந்த 72 வருட காலப்பகுதியில் 1948ஆம் ஆண்டு அரசியல் யாப்பு இரத்து செய்யப்பட்ட பின்னர் இரண்டு அரசியல் யாப்புகள் மூலம் நாடு முன்னெடுக்கப்பட்டது. இதில் முதலாவது 1972ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மக்கள் குடியரசு யாப்பு ஆகும். அத்தோடு இரண்டாவது 1978ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பு அமைப்பாகும்.

வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்து தாய்நாட்டின் இறைமைக்காக இரத்தம் சிந்தியமை மற்றும் உயிரை தியாகம் செய்தவர்களின் எண்ணிக்கை அளப்பரியதாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எமது தாய்நாட்டை கட்டுப்படுத்திய நாள் தொடக்கம் நாட்டு மக்கள் சுதந்திரத்திற்காக மேற்கொண்ட அளப்பரிய அர்ப்பணிப்பின் பெறுபேறே இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரமாகும்.

அடிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு கிளர்ச்சி மத்தியில் உயிரை தியாகம் செய்த பத்தாயிரம் பேரான தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் போன்ற நாட்டு பற்றைக் கொண்ட அனைவரதும் அர்ப்பணிப்பையும் நாம் மறந்துவிட முடியாது.

சுதந்திரத்திற்கு முன் இலங்கை

மன்னராட்சியின் அன்றைய கால இலங்கை வர்த்தகத்திற்கும் வணிகத்திற்கும் பெயர் போன நாடாக இருந்தது. இதனை ஆங்கிலேயர் அறிந்து கொண்டு இலங்கை வளங்களையும் இலங்கை மக்களையும் அடிமைப்படுத்த நினைத்தனர்.

போர்த்துகேயர், ஒல்லாந்தர் வரிசையில் இரண்டாம் இராஜசிங்க மன்னனால் இலங்கைக்கு அழைக்கப்பட்டவர்கள் ஆங்கிலேயர்கள். இதற்கு பழைய நூல்களில் ஒல்லாந்தரை விரட்டுவதற்கு ஆங்கிலேயரிடம் உதவி கேட்டுள்ளார் எனவும் இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கினார் எனவும் இரண்டாம் இராஜசிங்க மன்னனை விமர்சிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் வருகையின் பின் மன்னராட்சியை முடிப்பதற்காக ஆங்கிலயர்கள் பல உத்திகளை கையாண்டார்கள்.

அவற்றில் சில இலங்கை மக்களுக்கான கல்வி அறிவை வழங்குதல், உணவு பொருட்கள் வழங்குதல் போன்றவற்றின் ஊடாக மக்களிடம் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்தி கொண்டனர். மன்னரிடம் நட்புறவை பேணுவதற்காக விலை உயர்ந்த மதுபானங்கள் போன்றவற்றை பரிசளித்தனர்.

இவற்றிற்கு அடிமையான இலங்கை நாட்டு மன்னர் நாட்டு நலனில் அக்கறை இன்றி இருந்தனர். இதன் விளைவாக நாட்டின் அக்கறை அற்ற மன்னன் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. மன்னருக்கு எதிராக மக்களும் பிரதானிமார்களும் செயற்பட்டனர். இதனை அடுத்து மன்னரை சிறைப்பிடித்து பிரித்தானிய நாட்டுக்கு இழுத்து செல்லப்பட்டது. அதன் பிறகு இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றி கொண்டனர்.

பின் தங்கள் எண்ணப்படி மக்களை அடிமையாக்கி இலங்கையின் வளங்களை ஏற்றுமதி செய்தார்கள். அத்துடன், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி குறைந்த சம்பளமும் வழங்கினார்கள். இந்திய நாட்டு மக்களையும் குறைந்த சம்பளத்திற்கு நாட்டுக்குள் வரவழைக்கப்பட்டது. இவ்வாறு இலங்கை மக்களை மிக கொடுரமாக நடத்தினார்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்ற தினம் ஆங்கிலேயரின் கொடுமைகளை பொறுத்து கொள்ள முடியாத மக்கள் தமக்குள் பல தலைவர்களுடன் சேர்ந்து இலங்கை நாட்டை 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி ஆங்கிலயரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்ட செய்தனர். இந்த நாளை இலங்கையின் சுதந்திர தினமாக இலங்கைவாசிகளால் கொண்டாடப்படுகின்றது.

ஒவ்வொரு வருட சுதந்திர தினத்திற்கும் முப்படைகளின் வீரத்தை காட்டும் நாளாகவும் சுதந்திர தினம் காணப்படுகின்றது. தேசிய கொடியை ஏற்றி தேசிய கீதம் பாடி, மரியாதை செய்யப்பட்ட பின் தலைவர்களின் உரை ஏற்படும்.

பல் கலாசாரம் கொண்ட நாடு என்பதனால் ஒவ்வொரு கலாசாரத்தின் கலைகளும், சிறப்பியல்புகளையும் நடனம், பாடல், நாடகம் போன்ற வடிவில் வெளிப்படுத்துவார்கள். பட்டாசுகளும் வெடித்தும் கொண்டாடுவார்கள்.

சுதந்திர போராட்ட தலைவர்கள் சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக இன, மத வேற்றுமை இன்றி ஒன்றாக செயற்பட்டு இலங்கைக்கு சுதந்திரம் பெற்று கொடுத்துவர்கள் நம் நாட்டு தலைவர்கள் ஆவார்கள். அவர்களின் ஒவ்வொரு வாதங்களும் புரட்சிகளும் தான் நமக்கான இன்றைய சுதந்திர இலங்கையாக மாறியுள்ளது.

அந்த வகையில், போராட்ட தலைவர்களாக ஆறுமுக நாவலர், சேர்.பொன் இராமநாதன், C.W.W.கன்னங்கரா, ஆனந்த குமாரசாமி, கலாநிதி டி.பீ.ஜாயா, சேர்.டி.பீ.ஜயதிலக்க, வண.எஸ்.மகிந்த, கொங்காலேகொட பண்டா, ஆதர்.சி.கிளாக், மெனராவில கப்பெட்டிபொல திஸ்ஸவ, டி.எஸ்.சேனநாயக்க, அனகார தர்மபால, அறிஞர் எம்.சி.சித்திலெவ்வை, S.W.R.D.பண்டாரநாயக்க போன்றவர்களை குறிப்பிடலாம்.

சுதந்திரத்தின் பின் இலங்கை

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் ஜனநாயக முறை ஆட்சி இலங்கைக்குள் கொண்டுவரப்பட்டது. அதன் விளைவாக பல கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டது. அத்துடன், அரசியல் தொடர்பான சீர்திருத்தங்களும் உருவாக்கப்பட்டது.

அவையாவன சோல்புரி யாப்பு, 1972 முதலாம் குடியரசு யாப்பு, 1978 இரண்டாம் குடியரசு யாப்பு என்பவையாகும். அதன் பின் ஒன்பது மாகணங்களாக இலங்கையை பிரித்து ஆட்சி செய்யப்பட்டது.

கல்வி தொடர்பில் இலவசமான கல்வி அனைத்து மாணவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற திட்டம் C.W.W.கன்னங்கரா அவர்களால் கொண்டு வரப்பட்டது. மனித உரிமைகள், பாதுகாப்பு, அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக சட்டங்களும் கொண்டு வரப்பட்டது. இன்னும் பல நிதி, நீதி என நாட்டை பலப்படுத்தும் அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

இன்றைய இலங்கை நாட்டை உருவாக்குவதற்காக பாடுபட்ட தலைவர்களுக்கும் இன்று எமது சுதந்திர இலங்கையை பாதுகாக்கும் வீரர்களுக்கும் நன்றிகள் சொல்வதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

பல வேற்றுமைகள் இலங்கை நாட்டில் காணப்படுகின்ற போதும் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற எண்ணம் என்றும் மாறாது. நம் ஒற்றுமை தான் நாட்டில் பலம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.







# மாட்டுவண்டி பவனி

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் மாட்டுவண்டி பவனி ஒன்று ஞாயிற்றுக்கிழமை (02) முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் ஒன்று கூடலின் போது, 2010ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் இந்த மாட்டுவண்டி பவனி முன்னெடுக்கப்பட்டது.

பவனியில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகளைச் சுற்றி பவனியாக வலம் வந்த போது வீதியில் சென்ற மக்கள் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு உற்சாகமூட்டுவதை அவதானிக்க முடிந்தது. தமிழர்களின் பாரம்பரியத்தைப் பேணிக்காப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பழைய மாணவர்களை பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.






அமெரிக்கா

ட்ரம்பின் வரிவிதிப்பு:

# நெருக்கடிக்குள் தள்ளப்படும் அமெரிக்க மக்கள்

ட்ரம்பின் வரிவிதிப்பு நடவடிக்கை, கனடா, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்கா பொருட்களுக்கு 25 சதவீத இறக்குமதி விதிக்கப்படுவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார். இதே போல, சீனா மற்றும் மெக்சிகோ நாடுகளும் அமெரிக்கா பொருட்களுக்கு இறக்குமதி வரி விதித்தது.

இந்த வர்த்தக போரால் அமெரிக்காவின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் குறுகிய காலத்தில் விலை வாசி உயரும் அபாயம் இருப்பதாக, பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர். ஆனாலும் ட்ரம்ப் தனது



முடிவில் உறுதியாக இருக்கிறார்.

அமெரிக்கா வரிகளுக்கு எதிராகப் பதிலடி நடவடிக்கையாக கனடா, மெக்சிகோ நாடுகள் செயற்படுகிறது. இதனால் அமெரிக்க மக்கள் பொருளாதார வலியை உணரக்கூடும்.

"அமெரிக்க நலனைப் பாதுகாக்க இந்த வலிக்கு விலை மதிப்பு அதிகம். நாங்கள் அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக மாற்றுவோம். கனடாவில் உற்பத்தியாகும் எந்த பொருளும் எங்களுக்குத் தேவையில்லை. எங்களுக்கு ஆற்றல் இருக்கிறது" என, ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், "நாங்கள் சொந்தமாக அந்த பொருட்களை உருவாக்குவோம். எங்களுக்குத் தேவையான அளவை விட அதிகமாக வைத்து இருப்போம்" என்றார்.

இத்தாலி

அல்பேனியாவில் இருந்த அகதிகள்


## இத்தாலிக்கு இடமாற்றம்

அல்பேனியாவில் இருந்த சுமார் 50 அகதிகள் படகு மூலம் இத்தாலிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ், எகிப்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஏராளமானோர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குக் குடியேறுகின்றனர். ஆனால் இந்த அகதிகள் குடியேற்றத்தால் அங்கு சட்டம், ஒழுங்கு கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த எல்லைப் பகுதிகளில் ஐரோப்பிய நாடுகள் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளன.

இதற்கிடையே கடந்த ஆண்டு, சுமார் 66 ஆயிரம் பேர் அகதிகளாக இத்தாலியில் குடியேறியுள்ளனர். எனவே, அகதிகள் குடியேற்றத்தைத் தடுக்க அரசாங்கம் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அந்தவகையில், இத்தாலிக்குள் நுழைய முயன்ற 50 பேரைக் கைது செய்த கடலோர பொலிஸார், அல்பேனியாவில் உள்ள அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர். பின்னர் அங்கிருந்து அவர்களை நாடு கடத்த அரசாங்கம் முடிவு செய்தது. ஆனால் அவர்களை நாடு கடத்துவதற்குத் தடை விதித்து இத்தாலி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து, அல்பேனியாவில் இருந்த சுமார் 50 அகதிகள் படகு மூலம் இத்தாலிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.





பிரான்ஸ்

## முதியோர் காப்பகத்தில் தீ விபத்து

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் அருகே உள்ள பவுபேமாண்ட் நகரில் உள்ள முதியோர் காப்பகத்தில், சனிக்கிழமை (1) இடம்பெற்ற தீ விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த காப்பகத்தில் உள்ள சலவை அறையில் ஏற்பட்ட தீ ஏனைய பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியுள்ளது. தீப்பற்றிய மூன்றாவது தளம் முழுவதும் புகை மண்டலமாகியுள்ளது.

இதனால் காப்பகத்தில் இருந்து வயோதிபர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் புகையைச் சுவாசித்ததால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு,. வெளியேற முடியாமல் சிக்கிக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து, அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடி தீயை அணைத்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். மூச்சுத்திணறல் காரணமாக அவர்கள் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 9 பேர் காயமடைந்துள்ளனர்.

புதுடெல்லி

பாராளுமன்றத்தில்

## இராமாயணம் அனிமேஷன்

பாராளுமன்றத்தில், எதிர்வரும் 15ஆம் திகதி இராமாயணம் அனிமேஷன் திரைப்படம் சிறப்புக் காட்சியாகத் திரையிடப்படவுள்ளது.

1993ஆம் ஆண்டு வெளியான ஜப்பான் - இந்தியத் திரைப்படம் இராமாயணா: தி லெஜன்டு ஆஃப் பிரின்ஸ் ராமா'. இது 24ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. ஆனால் திரையரங்குகளில் வெளியாகவில்லை.

2000இல் தொலைக்காட்சிகளில் இராமாயணம் மீண்டும் வெளியாகி மக்களிடையே பிரபலமானது. இந்நிலையில் இராமாயணம் அனிமேஷன் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு இந்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டுள்ளது. இந்த இராமாயணா அனிமேஷன் திரைப்படம் பாராளுமன்றத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி சிறப்புக் காட்சியாக வெளியிடப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, எம்.பிக்கள் மற்றும் கலாச்சார துறையைச் சேர்ந்த சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொள்கின்றனர்.





புதுடெல்லி

மகா கும்பமேளா கூட்ட நெரிசல் விவகாரத்தால்

## எதிர்க்கட்சிகள் அமளி

மகா கும்பமேளா கூட்ட நெரிசல் தொடர்பாகப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டுள்ளன.

பாராளுமன்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடர் கடந்த 31ஆம் திகதி ஜனாதிபதி உரையுடன் தொடங்கியது. இதன்போது, 2025-2026ஆம் நிதியாண்டுக்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்தில், சனிக்கிழமை (1) தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில், திங்கட்கிழமை (3) காலை 11 மணியளவில் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் தொடங்கின. அப்போது உத்தரப்பிரதேசத்தில் உள்ள பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 30 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த உயிரிழப்பு குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் கோரிக்கை வைத்துள்ளன.

ஆனால், இதற்கான அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து, இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டுள்ளன.

இதையடுத்து, மாநிலங்களவையில் இருந்து காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

ஐந்தாவது போட்டியிலும்

# இங்கிலாந்தை வீழ்த்திய இந்தியா

இங்கிலாந்துக்கெதிரான ஐந்தாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் இந்தியா வென்றதோடு, மூன்றாவதில் இங்கிலாந்து வென்ற நிலையில், நான்காவதில் வென்று தொடரை இந்தியா ஏற்கெனவே கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில், மும்பையில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்ற ஐந்தாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர், இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, அபிஷேக் ஷர்மாவின் 135 (54), ஷிவம் டுபேயின் 30 (13), திலக் வர்மாவின் 24 (15),



சஞ்சு சாம்ஸனின் 16 (07), அக்ஸர் பட்டேலின் 15 (11) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் பிறைடன் கார்ஸ் 4-0-38-3, மார்க் வூட் 4-0-32-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 248 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, மொஹமட் ஷமி (3), வருண் சக்கரவர்த்தி (2), ரவி பிஷ்னோய், ஷிவம் டுபே (2), அபிஷேக் ஷர்மாவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 10.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 97 ஓட்டங்களையே பெற்று 150 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பில் ஸோல்ட் 55 (23) ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக அபிஷேக் ஷர்மாவும், தொடரின் நாயகனாக வருண் சக்கரவர்த்தியும் தெரிவாகினர்.

தொடரை 4-1 என்ற ரீதியில் இந்தியா கைப்பற்றியது.



## றஷ்ஃபோர்ட் கடன் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்த வில்லா

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான மார்க்கஸ் றஷ்ஃபோர்ட்டைக் கடனடிப்படையில் கைச்சாத்திடுவதை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான அஸ்தன் வில்லா பூர்த்தி செய்துள்ளது. வாங்குவதற்கான தெரிவொன்றை உள்ளடக்கிய பருவகால முடிவு வரையான ஒப்பந்தமொன்றில் வில்லாவில் 27 வயதான றஷ்ஃபோர்ட் இணைந்துள்ளார்.

கடனுக்கான தொகையை வில்லா செலுத்தாத நிலையில், றஷ்ஃபோர்டின் ஊதியத்தின் குறைந்தது 75 சதவீத ஊதியத்தை வில்லா செலுத்துமெனக் கூறப்படுகிறது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் நாப்போலி – றோமா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் திங்கட்கிழமை (03) அதிகாலை நடைபெற்ற நாப்போலியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் றோமா சமப்படுத்தியது.

நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை லியனார்டோ ஸிபினஸோலா பெற்றதோடு, றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை அங்கெலினோ பெற்றிருந்தார்.

இதேவேளை, சான் சிரோவில் ஞாயிற்றுக்கிழமை(02) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன், ஏ.சி மிலனுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது. இன்டர் மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸ்டெஃபான் டி வேர்ஜி பெற்றதோடு, ஏ.சி மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை டிஜ்ஜனி றெஜின்டர்ஸ் பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 54 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 51 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இன்டர் மிலனும், 47 புள்ளிகளுடன் அத்லாண்டா மூன்றாமிடத்திலும், 40 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஜுவென்டஸும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட இன்டர் மிலன் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



## ஜுவென்டஸ் செல்லும் ஒஸிம்ஹென்?

துருக்கிய கால்பந்தாட்டக் கழகமான கலடசரேயிலிருந்து இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலிக்கு நடப்புப் பருவகால முடிவில் முன்களவீரரான விக்டர் ஒஸிம்ஹென் திரும்பும்போது அவரைக் கைச்சாத்திடுவதற்கான தொகையைச் செலுத்தி அவரை இன்னொரு சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் கைச்சாத்திட தயாரகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் காலத்தில் தமது முன்களவீரரான டுஸன் விளாகோவிச் கழகத்தை விட்டுச் செல்வாரென எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் 26 வயதான ஒஸிம்ஹென்னை அவரது பிரதியீடாக ஜுவென்டஸ் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒஸிம்ஹென்னைக் கைச்சாத்திட 75 மில்லியன் யூரோக்கள் தேவையென்ற நிலையில் அதை பேரம்பேச ஜுவென்டஸ் முயலுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சிற்றியை பந்தாடிய ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 5-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக, மார்டின் ஒடெஹார்ட், தோமஸ் பார்ட்டி, மைலெஸ் லூயிஸ்-ஸ்கெல்லி, கை ஹவேர்ட்ஸ், ஈதன் என்வனேரி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எலிங் பிறோட் ஹலான்ட் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற கிறிஸ்டல் பலஸுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது. பலஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு



கோல்களையும் ஜீன்-பிலிப் மடெடா பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 56 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 50 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 47 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும் காணப்படுகின்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 04, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.